


# சிற்பியின் கட்டுரைகள்

பதிப்பாசிரியர்

டாக்டர் இரா. மோகன்

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.



கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் (1936) கோவை மாவட்டம் ஆத்துப்பொள்ளாச்சியில் பிறந்தவர். கேரளத்தில் பள்ளிக் கல்வியை முடித்தபின் திருச்சி ஜமால் முகமது கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் உயர்கல்வியை மேற்கொண்டார்.

1958 முதல் 1989 வரை பொள்ளாச்சி ந. க. ம. கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பணி. 1989 முதல் பாரதியார் பல்கலைக் கழகத்தில் தமிழியல் துறைத் தலைவராய் விளங்கிவருகின்றார்.

1963-ல் இவரது முதல் கவிதைத் தொகுதி 'நிலவுப் பூ' வெளிவந்தது. இதுவரை எட்டு கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அண்மையில் வந்த 'இறகு' எட்டாவது தொகுதி. 'ஆதிரை' - இவரது தனிச்சிறப்பான கவிதை நாடகம். 'இலக்கியச் சிந்தனை', 'அலையும் சுவடும்', 'மலையாளக் கவிதை' ஆகியன உரைநடை நூல்கள்.

ஆங்கிலத்திலிருந்தும் மலையாளத்திலிருந்தும் மொழி பெயர்ப்புகள் செய்துள்ளார். லலிதாம்பிகா அந்தர்ஜனத்தின் 'அக்னி சாட்சி' நாவலை மொழிபெயர்த்துள்ளார்.

தமிழ்க் கவிதையில் தடம் பதித்த 'வானம்பாடி' இயக்கத்தை வழி நடத்திய படைப்பாளிகளில் ஒருவர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையில் தனியிடம் பெற்ற இவரது சிந்தனைகள் இலக்கிய உலகில் கவனத்தோடு மதிக்கப்படுகின்றன.

பாரதியை ஆசானாகப் போற்றும் சிற்பி இப்போது ஈடுபட்டிருப்பது ஒரு காவியப் படைப்பில்.